# செயலாற்றுகை அறிக்கை 2019


**கிராமிய பொருளாதார அலுவல்கள் மற்றும் கால்நடை அபிவிருத்திப் பிரிவு**

**இல.80/5, நிலத் தளம், கொவிஜன மந்திரய ரஜமல்வத்தை மாவத்தை, பத்தரமுல்லை**

| | |
|---|---|
| **தொலைபேசி:** | **011-2883791** |
| **தொலைநகல்:** | **011-2883985** |
| **மின்னஞ்சல்:** | **info@reco.gov.lk** |
| **இணையத்தளம்:** | **www.reco.gov.lk** |

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு | 01 |
| 2. | முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் | 06 |
| 3. | வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை | 22 |
| 4. | செயலாற்றுகை சுட்டிகள் | 31 |
| 5. | பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை | 31 |
| 6. | மனித வள விபரம் | 32 |
| 7. | இணக்க அறிக்கை | 38 |

# 2019 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை

## விவசாய, கிராமிய அபிவிருத்தி அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு
## கிராமிய பொருளாதார அலுவல்கள் மற்றும் கால்நடை அபிவிருத்தி பிரிவு
## செலவின இலக்கம்: 118

## 1. நிறுவன செயற்பாடுகளின் நிறைவேற்றுப் பொழிப்பு

### 1.1. அறிமுகம்

கிராமிய மக்களின் பொருளாதார நிலையினை விரிவாக்குவதற்கான வாழ்வாதார அபிவிருத்தி நோக்கிய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான மூலதன ஒதுக்கீடுகளினை மேற்கொள்ளுதல் மற்றும் கிராமிய உள்ளக கட்டமைப்பு வசதிகள் மற்றும் சிறிய தொழில்முயற்சியாளர்களை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களினை நிறைவு செய்யும் வகையில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் என்பன கிராமிய பொருளாதார அலுவல்கள் உப பிரிவின் தொழிற்பாடுகளாகும். மேலும், நாடு பூராகவும் தொழிற்பட்டு வரும் விசேட பொருளாதார நிலையங்களினை ஒருங்கிணைப்புச் செய்தல் அவ்வாறே, தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் உள்ளக கட்டமைப்பு வசதிகளினை விருத்தி செய்வதற்கு பங்களிப்பினை வழங்குதல். மிகவும் ஆரோக்கியம் மிக்கதும் தரமானதுமான விலங்குகளினை உற்பத்தி செய்து அவற்றினை சந்தைக்கு வழங்குவதனூடாக அதிகரித்து வரும் உள்நாட்டுக் கேள்வியினை நிறைவு செய்தல் மற்றும் வகையில் என்பனவும் நோக்குடன் அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கிராமிய பொருளாதார உள்நாட்டு கேள்வியினை நிறைவு செய்யும் வகையில் தரமான கால்நடை உற்பத்திகளை அதிகரித்தல் மற்றும் கால்நடை உற்பத்திகளினை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் ஏற்படும் செலவினங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் கால்நடை அபிவிருத்தி உப பிரிவினால் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பன திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

### 1.2. நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

#### 1.2.1. நோக்கு

நிலையான கிராமிய பொருளாதாரத்தினூடாக வளமான நாட்டினை உருவாக்குதல்

#### 1.2.2. செயற்பணி

கிராமிய மக்களின் பொருளாதார நிலையினை விரிவாக்குவதற்கான வாழ்வாதார அபிவிருத்தி, உள்நாட்டு கேள்வியினை நிறைவு செய்யும் வகையில் தரமான கால்நடை உற்பத்திகளை அதிகரித்தல் மற்றும் சர்வதேச சந்தையில் காணப்படும் போட்டியினை வெற்றிகரமாக எதிர் கொள்வதற்காக வளமான உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்.

### 1.2.3. நோக்கங்கள்

- கிராமிய மக்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்கான கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களினை அமுலாக்குவதற்குத் தேவையான நிதி ரீதியான ஆதரவினை வழங்குதல் மற்றும் சிறிய தொழில் முயற்சியுடமை அபிவிருத்திக்கான கிராமிய உள்ளக கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துதல்

- கால்நடை கைத்தொழில் அபிவிருத்திக்கான உயர் உற்பத்தித்திறனுடன் கூடிய விலங்கு இனப்பெருக்கத்தினைஅதிகரித்தல், அதற்குத தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் உடல் ஆரோக்கியத்தினைப் பேணுவதற்கு உதவுதல்

- ஆரோக்கியமான விலங்கின விருத்திக்குத் தேவையான தரமான விலங்குணவுகளைத் தயாரித்தல் மற்றும் விலங்கு நோய்களினைத் தடுத்தல் அல்லது இல்லாதொழித்தல் தொடர்பில் வினைத்திறன் வாய்ந்த விலங்கு சுகாதார நலன் பேணல் சேவை அமுலாக்கலினைஉறுதி செய்தல்

- உயர்ந்த உற்பத்தித் திறனினைப் பெற்றுக் கொள்வதற்காக தரமான விலங்கு மரபணுவின் ஆகக்கூடுதலான பயன்பாட்டினை ஊக்குவித்தலும் உள்ளூர் விலங்கினங்களை விருத்தி செய்தலும்

- கால்நடை உற்பத்தி தொடர்பான சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, செயல்முறைப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்ப்பு என்பவற்றுடன் தொடர்புடைய தரப்புக்களை ஊக்குவித்தல்

- உள்நாட்டு பாற் பண்ணையாளர்களினை வலுப்படுத்துவதனூடாக திரவப் பால் உற்பத்தி இலக்குகளை அடைவதற்கான பங்களிப்புக்களை வழங்குதல்

- மொத்த வியாபாரிகள் மற்றும் நுகர்வோர்கள், விவசாய உற்பத்தியாளர்கள் ஆகியோருக்கிடையில் இணைப்பினை ஏற்படுத்துவதனூடாக உள்நாட்டு விவசாய உற்பத்திப் பொருட்களின் விலைகளினை ஏற்றுக் கொள்ளக்கூடிய மட்டத்தில் பேணும் நோக்குடன் விசேட பொருளாதார நிலையங்களினைத் தாபித்தல்.

## 1.3. பிரதான தொழிற்பாடுகள்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினினால் 2018 டிசம்பர் 28 ஆம் திகதிய 2103/33 ஆம் இல. அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக விவசாய, கிராமிய அபிவிருத்தி அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் கிராமிய பொருளாதார அலுவல்கள் கால்நடை அபிவிருத்திப் பிரிவுக்கு உரித்தளிக்கப்பட்ட தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு.

- ❖ கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் தொழிற்பட்டு வருகின்ற திணைக்களங்கள் மற்றும் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்கு உரித்தளிக்கப்பட்ட நோக்கெல்லையினுள் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தல் மற்றும் கருத்திட்டங்களை அமுல்படுத்துதலும் மதிப்பாய்வு செய்தலும்
- ❖ கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்
- ❖ பிரதேச மற்றும் கிராமிய அபிவிருத்தி கொள்கைகள் மற்றும் உபாய அபிவிருத்தி கொள்கைகளை வகுத்தல்
- ❖ கிராமிய உள்ளக கட்டமைப்பு வசதிகள் மற்றும் சிறிய தொழில்முயற்சி அபிவிருத்தி நடவடிக்கைகள்
- ❖ கிராமிய பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதிசார் உதவிகளை வழங்குதல்
- ❖ கால்நடைத் துறை உற்பத்திகளை அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்தல்
- ❖ விலங்கு நலன் பேணலும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளும்
- ❖ கால்நடை உற்பத்திகளினை ஊக்குவித்தல், இனவிருத்தி மற்றும் ஊக்குவித்தலுக்கான நடவடிக்கைகளினை எடுத்தல்
- ❖ நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி ஆராய்ச்சியினை விரிவாக்குதல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளினை எடுத்தல் மற்றும் ஆராய்ச்சி காண்புகள் மீது சார்ந்திருக்கின்ற உற்பத்திகளின் கணிய விருத்தி
- ❖ விலங்கு இனத்தொகையினை அதிகரிப்பதற்கான விஞ்ஞான முறையிலான இனப்பெருக்க முறையினை பரவச் செய்தலும் நோய்களிலிருந்து விலங்குகளைப் பாதுகாத்தலும்

## 1.4. நிருவாக கட்டமைப்பு



## 1.5. கிராமிய பொருளாதார மற்றும் கால்நடை அபிவிருத்திப் பிரிவின கீழ் தொழிற்பட்டு வரும் திணைக்களம்

- விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

## 1.6. கிராமிய பொருளாதார மற்றும் கால்நடை அபிவிருத்திப் பிரிவின கீழ் தொழிற்பட்டு வரும் நிறுவனங்கள் / நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்கள்

- விசேட பொருளாதார நிலையங்கள்
- சிய கால்நடை அபிவிருத்திச் சபை
- மில்கோ (தனியார்) லிமிட்டட்
- இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனி லிமிட்டட்
- வ/ப மஹாவலி விலங்குகள் தொழில்முயற்சிகள் கம்பனி
- கிராமிய புனர்வாழ்வு நிதியம்
- கிராமிய பொருளாதார புனர்வாழ்வு நிதியம் } முடிவுறா நிலையில் உள்ளது.
- ஜனதிரிய நிதியம் (கிராம சபை நிதியம்)

**2019.02.26 ஆம் திகதிய 2112/13 ஆம் இல. அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விசேட பிரதேச அபிவிருத்தி அமைச்சுக்கு மேற்குறித்த மூன்று நிதியங்கள் உரித்தளிக்கப்பட்டுள்ளன.*

## 1.7. வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப்பெற்ற கருத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள்

| தொடர் இல. | கருத்திட்டத்தின் பெயர் | உதவி வழங்கிய நாடு | மதிப்பிடப்பட்ட செலவினம் (ரூ.மி.) | கால எல்லை |
|---|---|---|---|---|
| 01 | பதல்கமவில் பால் பதனிடும் பொறுமுறையினைத் தாபித்தல் | டென்மார்க் அரசாங்கம் | 11,783.00 | 2016-2020 |
| 02 | 20,000 கறவை மாடுகளின் இறக்குமதி | அவுஸ்திரேலிய அரசாங்கம் | 11,170.00 | 2017-2020 |
| 03 | சிறியளவிலான பால் பதனிடும் நிலையங்களினைத் தாபித்தல் | பிரான்ஸ் அரசாங்கம் | 4,086.00 | 2018-2021 |
| 04 | விவசாய அடிப்படையிலான கைத்தொழில்கள் மற்றும் விவசாய பொருளாதார நிலையக் கருத்திட்டம் | சீன மக்கள் குடியரசு | 38,123.31 | * |
| 05 | மட்டக்களப்பு மாவட்டத்தில் பொது சுகாதார வசதிகளினை மேம்படுத்துவதற்காக 3,400 சுகாதார அலகுகளினைத் தாபித்தல்.** | இந்திய அரசாங்கம் | 360.00 | 2020 |

** சீன அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்குமிடையில் நிதிசார் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் கருத்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. அடுத்து வரும் நான்கு ஆண்டு காலப்பகுதியில் இக்கருத்திட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*** இந்தக் கருத்திட்டத்திற்குரிய பெறுகைகள் நடவடிக்கைகளினை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

## 2. முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

### 2.1. கால்நடை அபிவிருத்தி உப பிரிவு

*2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கால்நடை அபிவிருத்தி உப பிரிவினால் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு. (செப்ரெம்பர் 30 இலுள்ளவாறு.)*

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | 2019 வரவு செலவுத்திட்ட ஏற்பாடு (ரூ.மி.) | பௌதீகசார் முன்னேற்றம் (%) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி) | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | திரவப் பால் நகர்வினை ஊக்குவித்தலும் வசதிப்படுத்தலும் | 20.0 | 60 | 14.09 | இன்னுமொரு ரூ. 1.26 மில்லியன் மீள்நிதியிடப்பட வேண்டியுள்ளது. |
| 2. | விலங்கு இனவிருத்திப் பண்ணைகளைத் தாபித்தல் | 20.0 | 92 | 18.78 | இன்னுமொரு ரூ. 0.8 மில்லியன் மீள்நிதியிடப்பட வேண்டியுள்ளது |
| 3. | நடுத்தர கால கால்நடை விருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 20.0 | 75 | 15.31 | இன்னுமொரு ரூ. 4.95 மில்லியன் மீள்நிதியிடப்பட வேண்டியுள்ளது. |
| 4. | சிறிய மற்றும் நடுத்தரளவலான கோழிப் பண்ணை விருத்தி | 5.0 | 94 | 3.56 | இன்னுமொரு ரூ. 0.58 மில்லியன் மீள்நிதியிடப்பட வேண்டியுள்ளது. |
| 5. | இலங்கையில் பன்றி வளர்ப்பினை மேம்படுத்துதல் | 3.0 | 98 | 2.26 | இன்னுமொரு ரூ. 0.89 மில்லியன் மீள்நிதியிடப்பட வேண்டியுள்ளது. |
| 6. | பதல்கமவில் பால் பதனிடும் பொறிமுறையினைத் தாபித்தல் (இலங்கை அரசாங்கம் / டென்மார்க்) | 800.0 | 87 | 627.60 | - |
| 7. | தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் | 120.0 | 85 | 77.61 | இன்னுமொரு ரூ. 29.03 மில்லியன் மீள்நிதியிடப்பட வேண்டியுள்ளது. |
| 8. | 20,000 கறவை மாடுகளின் இறக்குமதி | 3,140.0 | 80 | 3,033.24 | - |
| 9. | சிறியளவிலான பால் பதனிடும் நிலையங்களினைத் தாபித்தல் | 2,065.0 | 65 | 1,965.76 | - |
| | **மொத்தம்** | **6,193.0** | | **5,758.21** | |

#### 2.1.1. திரவப் பால் நுகர்வினை ஊக்குவித்தலும் வசதிப்படுத்தலும்

##### 2.1.1.1. வறுமையினை ஒழிக்கும் நோக்குடன் பெண்கள் குடும்பத் தலைவிகளாக இருக்கும் குடும்பங்களுக்கு கறவை மாடுகளினை வழங்கும் கருத்திட்டம்

கால்நடைத்துறையில் ஈடுபடுகின்றவர்களில் பெரும்பாலானோர் சிறிய பாற் பண்ணைகளினை வைத்திருப்பதுடன் இத்தகைய குடும்பத் தலைவிகளினால் பாரியளவு பங்களிப்பு வழங்கப்படுகின்றது. இக்கருத்திட்டத்தின் கீழ், ரூபா.80,000 பெறுமதியினைக் கொண்ட உயர்

வினைத்திறன் கொண்ட கறவை மாடுகள் பெண்களைத் தலைவிகளாக கொண்ட பாற் பண்ணைகளுக்கு அரசாங்கத்தின் 50% பங்களிப்புடன் வழங்கப்படும். இக்கருத்திட்டமானது அவர்களின் வறுமையினை ஒழிப்பதன் மூலம் அத்தகைய பாற்பண்ணைப் பெண்களுக்கு வலுவூட்டலினையும் வழங்கும்.

மாகாண விலங்கு இனவிருத்தி மற்றும் சுகாதார திணைக்கங்களினூடாக அமுல்படுத்தப்படும் இக்கருத்திட்டத்தின் கீழ் கீழ் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 36 பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 34 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### 2.1.2. விலங்கு இனவிருத்தி பண்ணைகளினைத் தாபித்தல்

#### 2.1.2.1. இனவிருத்திப் பண்ணைகளினைத் தாபித்தல்

இந்த இனவிருத்தி பண்ணையானது உள்ளூர் பால் உற்பத்தியினை அதிகரிப்பதற்குத் தேவையான உயர் கறவை மாடுகளின் கிடைப்பனவானது தட்டுபாடாக உள்ளமையினைக் கருத்தில் கொண்டு அதனை நிவர்த்தி செய்யும் நோக்குடன் நாடு பூராகவும் மாகாண மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க, 2019 ஆம் ஆண்டில் ரூபா 20 மில்லியன் செலவில் 40 விலங்கு இனவிருத்திப் பண்ணைகளினைத் நிருமாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதற்கான உத்தேச முதலீடு ரூபா. 4 மில்லியனாகும். திட்டமிடப்பட்டவாறு இனவிருத்திப் பண்ணைகளின் நிருமாண நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன. இனவிருத்திக்குப் பொருத்தமான விலங்குகளின் கொள்வனவு மற்றும் மாடுகளுக்கான கொட்டகைகளின் நிருமாணம் என்பன இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுளளன. இதற்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா. 4 மில்லியனாகும்.

***2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொழிற்பட்ட இனவிருத்திப் பண்ணைகளின் எண்ணிக்கை***

| *இனவிருத்திப் பண்ணை* | *இனவிருத்திப் பண்ணை* | |
|---|---|---|
| | *இலக்கு* | *தொழிற்படுபவை* |
| *மத்திய* | *05* | *05* |
| *கிழக்கு* | *03* | *03* |
| *வடக்கு* | *05* | *05* |
| *வட மத்திய* | *05* | *05* |
| *வட மேல்* | *05* | *05* |
| *சப்பிரகமுவ* | *02* | *02* |
| *தெற்கு* | *05* | *05* |
| *ஊவா* | *05* | *05* |
| *மேல்* | *05* | *05* |
| ***மொத்தம்*** | ***40*** | ***40*** |

### 2.1.3. இடைக்கால கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

வட மாகாணத்தில் கால்நடைத் துறையினை விருத்தி செய்வதற்கான பாரிய தேவை எழுந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, மிருக வைத்திய அலுவலகங்கள் மற்றும் உள்ளக கட்டமைப்பு வசதிகள் என்பவற்றினை நிருமாணிப்பதனூடாக இத்துறையில் சேவைகள் வழங்கலினை விரிவாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீளாய்வு காலப்பகுதியில் நிருமாணிக்கப்பட்ட உத்தியோகபூர்வ தங்குவிடுதிகள் மற்றும் அலுவலகங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| உத்தியோகபூர்வ தங்குவிடுதி+கள் | ளெதீக முன்னேற்றம் (%) |
|---|---|
| கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி மிருக வைத்திய உத்தியோகபூர்வ விடுதி | 100 |
| வவுனியா மாவட்டத்தில் ஈரற்பெரியகுளம் மிருக வைத்திய உத்தியோகபூர்வ விடுதி | 100 |
| மன்னார் மாவட்டத்தில் மன்னார் மிருக வைத்திய அலுவலக கட்டிடம் | 50 |
| யாழ்ப்பாண மாவட்டத்தில் திருநெல்வேலி பல நோக்கு கட்டிட நிருமாணம். | 15 |



கிளிநொச்சி மிருகவைத்திய உத்தியோபூர்வ விடுதி



வவுனியா மிருகவைத்திய உத்தியோபூர்வ விடுதி

### 2.1.4. சிறிய மற்றும் நடுத்தரளவிலான கோழிப் பண்ணைகளினை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டமானது கோழிப் பண்ணை உற்பத்தி நடவடிக்கைளில் தன்னிறைவினைக் காணுதல் மற்றும் ஏற்றுமதிச் சந்தையினை இலக்குப்படுத்துதல் போன்ற நோக்கங்களின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், புதிய தொழில்முயற்சியாளர்கள் கவரப்பட்டுள்ளதுடன் தற்போதிருக்கும் தொழில் முயற்சியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டுமுள்ளார்கள். முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி அவ்வாறே விலங்கு உணவு உற்பத்தி என்பனவற்றினை பரவலாக்கம் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனிநபரும் வாரமொன்றிற்கு ஆகக் குறைந்தது 03 முட்டைகளையும் வருடமொன்றிற்கு 10 கி.கி. இறைச்சியினையும் நுகரும் வகையில் முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பவற்றின் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டில் 375 சிறிய மற்றும் நடுத்தரளவிலான கோழிப்பண்ணைகளினை நிருமாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் மீளாய்வு காலப்பகுதியில், ரூபா. 1.484 மில்லியன் செலவில் 415 சிறியளவிலான சிறியளவிலான பண்ணைகள் தாபிக்கப்பட்டுள்ளன. 05 சிறியளவிலான விலங்குணவு உற்பத்தி செய்யுமிடங்கள் 08 இறைச்சி உற்பத்தி செய்யும் நிலையங்கள் என்பவ்றறினை நிருமாணிப்பதற்கு ரூபா. 1.946 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

### 2.1.5. பன்றி வளர்ப்பு விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

மீளாய்வு காலப்பகுதியில், நாடு பூராகவும் இயங்கி வந்த 54 சிறியளவிலான பன்றி தொழுவங்களை சூழலுக்கு ஏற்றவகையில் மாற்றியமைக்க வேண்டியிருந்ததுடன் இதற்காக ரூபா.2.691 மில்லியன் தொகையானது முதிலீடு செய்யப்பட்டுள்ளது. வட மேல் மாகாணத்திலுள்ள வன்னிகம கூட்டுப் பண்ணை அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில் அமைந்துள்ள மாதிரி பன்றி வளர்ப்புப் பண்ணையில் சிறியளவிலான பன்றி கொல்

களமொன்றினை நிருமாணிப்பதற்கு ரூபா. 0.449 மில்லியன் தொகையானது முதலீடு செய்யப்பட்டுள்ளது.



*சிறியளவிலான பன்றித் தொழுவம்*

## 2.1.6. பதலகமவில் பால் பதனிடும் பொறித் தொகுதியினைத் தாபித்தல்

மில்கோ கம்பனிக்குச் சொந்தமான கொழும்பு நாரஹென்பிட்டியில் அமைந்துள்ள பால் தொழிற்சாலையினை தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பதலகம சிரிங்கபாத பண்ணைக்கு மாற்றியமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டமானது டென்மார்க் அரசாங்கத்தின் நிதி உதவுகையுடன் அமுல்படுத்தப்பட்டு வருவதுடன் அதன் முதல் கட்டமாக தொழிற்சாலை நிருமாணத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவமானது 2016.05.18 ஆம் திகதியன்று இடம்பெற்றது. மீளாய்வு காலப்பகுதியின் இறுதியில் அடையப்பெற்ற முன்னேற்றங்கள் பின்வருமாறு.

| செயற்பாடு | பௌதீக முன்னேற்றம் (%) | முதலீடு |
|---|---|---|
| பால் தொழிற்சாலைக்கான கட்டிட நிருமாணம் | 99 | |
| நிருவாக / அலுவலக கட்டிடம் | 99 | |
| சிற்றுண்டிச்சாலைக்கான கட்டிடம் | 98 | |
| பதவியினருக்கான உத்தியொகபூர்வ விடுதி மற்றும் பாதுகாப்புச் சாவடி அமைத்தல் | 99 | |
| கழிவு நீர் முகாமைத்துவ அலகு | 100 | |
| மின்பிறப்பாக்க அலகினைத் தாபித்தல் | 75 | |
| இயந்திரம், உபகரணம் மற்றும் நிருமாணப் பொருட்களின் 54 கொள்கலன்கள் இறக்குமதி | | யூரோ 58.91 மில் |
| இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களுக்கு உள்நாட்டு நிதியத்தில் செலுத்திய வரி | | ரூ.206.56 மில். |





*பதலகம புதிய பால் பதனிடும் நிலையம் நிருமாணமும் இயந்திரங்கள் நிறுவப்படுதலும்*

## 2.1.7. தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்

கிராமிய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தினை அதிகரிக்கும் நோக்குடன் தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்வரும் கருத்திட்டங்கள் அமுல்படுத்துகின்றன.

### 2.1.7.1. சிறியளவிலான பாற் பண்ணைகளினை வலுவுட்டுதல்

இக்கருத்திட்டமானது தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய நிதி ஏற்பாடுகளினைப் பயன்படுத்தி சிறியளவிலான பாற் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பாலின் தரத்தினை ஊக்குவிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது. இந்த நிதி உதவு தொகையின் 50% ஒவ்வொரு பயனாளிக்கும் கிடைக்கும் வகையில் ஆகக்கூடுதலாக ரூபா.80,000/- வழங்கப்படும். மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களங்கள் மற்றும் மில்கோ (தனியார்) லிமிட்டட் என்பவற்றினூடாக நடைமுறைப்படுத்தப்படும் இந்தக் கருத்திட்டத்தின் கீழ் மீளாய்வு காலப்பகுதியினுள் மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினூடாக 461 கருத்திட்டங்களும் மில்கோ (தனியார்) கம்பனியினூடாக 30 கருத்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

### 2.1.7.2. சிறியளவிலான ஆட்டுப் பட்டிகளினை விருத்தி செய்யும் கருத்திட்டம்

சிறியளவிலான ஆட்டுப் பட்டிகளினை நடாத்தி வரும் விவசாயிகளின் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல் மற்றும் உள்நாட்டு ஆட்டுப்பால் மற்றும் ஆட்டிறைச்சி என்பவற்றின் உற்பத்திகளினை அதிகரித்து மக்களின் போசணை மட்டத்தினை மேம்படுத்தும் நோக்குடன் முன்னெடுக்கப்படும் இக்கருத்திட்டத்தின் கீழ், 292 ஆட்டுப்பட்டிகளினை நிருமாணிப்பதற்காக ரூபா.17.5 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, பயனாளி ஒருவருக்கு கடா மற்றும் மறி ஆடுகள் 04 அல்லது 05 இனைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா.60,000 பணமாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.1.7.3. சிறியவிலான கோழிப்பண்ணை விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

வீட்டு மட்டத்தில் கோழிப்பண்ணைகளினை விருத்தி செய்வதற்கு உதவியளிப்பதன் மூலம் பொது மக்களின் ஊட்டச்சத்து மட்டத்தினை அதிகரிப்பதே சிறிய கோழிப்பண்ணை விருத்தி கருத்திட்டத்தின் கீழ், கோழிகளினை வீட்டுல் வளர்க்கவும் அவற்றிற்கான உணவினை வீடுகளிலிருந்தே வழங்கவும் முடியும்.

இக்கருத்திட்டத்தின் கீழ், மீளாய்வு காலப்பகுதியினுள் நாடு பூராகவும் 7,085 சிறிய மற்றும் நடுத்தரளவிலான கோழிப் பண்ணைகளினைத் தாபிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக ரூபா.28.592 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.



*பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சுகள் வழங்கப்படுகையில்*

### 2.1.8. 20,000 கறவை மாடுகளினை இறக்குமதி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

திரவப் பால் உற்பத்தியினை அதிகரித்தல் மற்றும் உயர்ந்த இனவிருத்தித் திறன் கொண்ட கறவை மாடுகளினை வழங்குதல் போன்ற நோக்கங்களுடன் 20,000 கறவை மாடுகளினை இறக்குமதி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனூடாக, கறவை மாடுகள் வளர்க்கப்பட்டு வரும் சிறிய மற்றும் நடுத்தர மாட்டுத் தொழுவங்களுக்கு இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் கறவை மாடுகளினை வழங்குவதனூடாக வினைத்திறன் வாய்ந்த தரமான பாலினை உற்பத்தி செய்யும் வகையில் நாடளாவிய ரீதியில் பல்வேறு பண்ணைகளினை நிருமாணிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய விலங்குகளின் முதல் தலைமுறைக் கன்றுகள் பால் உற்பத்திக்காகவும் அவ்வாறே உள்நாட்டு தொழில்முயற்சிகளினை விருத்தி செய்வதற்காகவும் பயன்படுத்தப்படவுள்ளன.

அதற்கிணங்க, இந்தக் கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ். 2,000 கறுவை மாடுகள் 2017 மே மாத்தில் அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு அவை 68 முதலீட்டாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. அவை 2019.07.31 ஆம் திகதியிலுள்ளவாறு 5,650 கன்றுகளினை ஈன்றுள்ளதுடன் அவை 2017 ஆகஸ்டிலிருந்து 2019 ஏப்பிரல் வரையிலான காலப்பகுதியில் உள்நாட்டு பால் உற்பத்திக்கு 21.12 மில்லியன் லீற்றர் பாலினை வழங்கியுள்ளன.

### 2.1.9. சிறியளவிலான பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களினை விருத்தி செய்தல்.

இலங்கையில் பால் உற்பத்தியினை மேம்படுத்தும் நோக்குடன் அமுல்படுத்தப்படும் இக்கருத்திட்டத்தின் முதன்மை நோக்கமானது உரிய பிரதேசங்களில் பெறுமதி சேர் பால் உற்பத்திப் பொருட்களினை உற்பத்தி செய்வதனூடாக சமூகத்தின் ஊட்டச்சத்து மட்டத்தினை அதிகரிப்பதுடன் பால் நுகர்வினை பிரபல்யப்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டது. இதன் கீழ், 06 தெரிவு செய்யப்பட்ட சிறியளவிலான பால் உற்பத்தி நிலையங்களினை விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் 13.9 மில்லியன் ஈரோ பெறுமதியில் முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கருத்திட்டத்துடன் தொடர்புடைய நிதிசார் உடன்படிக்கையானது 2018.09.28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதுடன் வழங்கல் உடன்படிக்கையானது 2019.02.27 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது. தற்போது இக்கருத்திட்டத்திற்கான உபகரணங்களை இறக்குமதி செய்த பின்னர் பால் உற்பத்திகளினை பதப்படுத்தும் நிலையங்களினைத் தாபிப்பதற்கான அடிப்படை நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 2.2. 2020 ஆம் ஆண்டில் கால்நடை அபிவிருத்திப் பிரிவினால் அமுல்படுத்தப்படவுள்ள நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்திட்டங்களும்

2019 இல் அமுல்படுத்தப்பட்ட பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள் 2020 இலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.
அத்துடன், திரட்டு நிதியினைப் பயன்படுத்தி மேலுமொரு அபிவிருத்திக் கருத்திட்டமொன்று 2020 இல் அமுல்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் அதன் விபரங்கள் பின்வருமாறு;

| கருத்திட்டம் | காலப்பகுதி | மொத்த மதிப்பீட்டுச் செலவு (ரூ.மி) | நோக்கமும் பயன்பாடும் | கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் முறை |
|---|---|---|---|---|
| கொத்தணி கிராம கருத்திட்டம் (ஆடு, பன்றி, கோழி) | 2020 ஜன – டிசம். | 12.0 | சமூகத்தின் சமூக் பொருளாதார தகுதிநிலையினை மேம்படுத்துதலும் விலங்கு வேளாண்மையினை விருத்தி செய்தலும்.. | மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களங் களினூடாக. |

## 2.3. கிராமிய பொருளாதார அலுவல்கள் உப பிரிவு

இந்தப் பிரிவினூடாக 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு.

1. கிராமிய பொருளாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்
   - வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டம்
   - கிராமிய பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டம்
2. பாரம்பரிய கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
   - பாரம்பரிய கைப்பணிப் பொருட்கள் கிராம அபிவிருத்திக் கருத்திட்டம்
   - மட்பாண்ட கிராம அபிவிருத்திக் கருத்திட்டம்
   - கித்துல் அபிவிருத்திக் கருத்திட்டம்

### 2.3.1. கிராமிய பொருளாதார ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் – 2019

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் நகர மற்றும் அரை நகரம் சார்ந்த பிரதேசங்களிலுள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களின் வருமான மட்டத்தினை அதிகரிப்பதற்கான வினைத்திறன் வாய்ந்த நடவடிக்கைகளினை முன்னெடுப்பதேயாகும். குறித்த ஆண்டு காலப்பகுதியில், இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக உள்ளூர் நிதியங்களிலிருந்து சுமார் ரூபா.270.00 மில்லியன் நிதி ஏற்பாடானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிராமிய அணுகு வீதிகளினை விருத்தி செய்தல், சிறிய பாலங்கள், மதகுகள், வடிகாலமைப்பு வசதிகள், பொது மக்களுக்கான குடிநீர் வழங்கல், குடிநீர் கிணறுகளினை திருத்தியமைத்தல், பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கட்டிடங்களினை திருத்தியமைத்தல், சமூக பங்களிப்பு முறைமைக்கு அமைவாக கிராமத்தில் விருத்தி செய்யப்பட வேண்டிய உள்ளக கட்டமைப்பு வசதிகளின் கீழ் ஏனைய பொதுக் கட்டிடங்களினைத் திருத்தியமைத்தல் போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிராமிய தொழில்முயற்சியாளர்களுக்கான பயிற்சிகள், உபகரணங்கள், தொழில்நுட்ப மற்றும் வசதிகளினை வழங்குதல் என்பன கிராமிய அபிவிருத்தி இலக்குகளினை அடைவதில் முக்கியத்துவம் வாய்ந்த காரணிகளாக விளங்குகின்றன. வருமானத்தினை ஈட்டுதல், சுய வேலைவாய்ப்பிற்காக மக்களினை நெறிப்படுத்துதல் மற்றும் கிராமிய உற்பத்திகளினை அதிகரித்தல் என்பனவற்றிற்கு ஆதரவளிப்பதனூடாக பெறப்படுகின்றன ஆதரவானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத்தகைய நோக்கங்களினை அடையும் பொருட்டு, கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் அடையாளங் காணப்பட்ட கிராமிய தொழில்முயற்சியாளர்களுக்கு பயிற்செய்கைக்கான நீர் இறைக்கும் இயந்திரம், விவசாய நடவடிக்கைகளுக்கான புல் வெட்டும்

இயந்திரங்கள், தையல் இயந்திரங்கள் மற்றும் மீன்படி உபகரணங்கள் போன்ற உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இக் கருத்திட்டமானது, 2019 இல் அநுராதபுரம், பொலநறுவை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, காலி, மொனராகலை, இரத்தினபுரி, களுத்துறை, புத்தளம் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டது. மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோரினால் அடையாளங் காணப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, 108 கிராமிய உள்ளக கட்டமைப்பு கருத்திட்டங்கள் 2019 இல் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இதனூடாக 28,899 பயனாளிகளுக்கு இத்தகைய வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 3,653 பயனாளிகளுக்கு உதவியளிக்கப்பட்டுள்ளது. மிகச் சிறந்த பொருளாதாரத்தினை உருவாக்கும் நோக்கினைக் கொண்ட இந்த நிகழ்ச்சித்திட்டமானது, கிராமிய வறுமை நிலையினைக் குறைத்தல், கிராமிய தொழில்முயற்சியாளர்களினை வலுவூட்டுதல், வருமானத்தினை ஈட்டுதல் மற்றும் சுய வேலைவாய்ப்பினூடாக கிராமிய பொருளாதாரத்தினை வலுவூட்டுதல் போன்ற வாழ்வாதார மேம்படுத்தல்களினையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

***2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கிராமிய உள்ளக கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்***

| இல. | மாவட்டம் | கிராமிய உள்ளக கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் | | | | | வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் | ஒதுக்கீடு (ரூ.மி.) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வீதி அபிவிருத்தி | குடிநீர் கருத்திட்டம் / கிணறு | அணைக்கட்டுக்கள், மதகுகள், வடிகாலமைப்புக்களின் நிருமாணம். | பூர்த்தி செய்யப்பட்ட சனசமூக மண்டபம் | பயனாளிகளின் எண்ணிக்கை | உபகரணங்கள் வழங்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடு | செலவினம் | தீர்க்கப்படாத பட்டியல்கள் |
| 01 | அநுராதபுரம் | 10 | 10 | 02 | 02 | 3,800 | 25 | 94.0 | 14.1 | 6.7 |
| 02 | மட்டக்களப்பு | 18 | - | - | - | 6,400 | 2,200 | 59.7 | 57.5 | 20.6 |
| 03 | மொனராகலை | 07 | 01 | - | - | 3,955 | 316 | 10.0 | 9.8 | 1.7 |
| 04 | பொலநறுவை | 02 | 01 | - | - | 903 | 400 | 9.9 | 9.8 | 3.2 |
| 05 | காலி | 09 | 01 | 01 | - | 2,225 | - | 10.0 | 8.9 | 2.5 |
| 06 | புத்தளம் | - | - | - | 01 | 99 | 640 | 10.0 | 9.3 | 5.5 |
| 07 | இரத்தினபுரி | 08 | - | 02 | - | 5846 | - | 10.0 | 9.6 | 6.1 |
| 08 | களுத்துறை | 09 | - | 02 | - | 360 | - | 9.9 | 9.2 | 5.6 |
| 09 | முல்லைத்தீவு | 08 | 01 | - | - | 3895 | 50 | 10.0 | 9.0 | 4.3 |
| 10 | மாத்தளை | 10 | 01 | 01 | - | 1416 | 22 | 10.0 | 7.6 | 2.3 |
| | மொத்தம் | 81 | 15 | 09 | 03 | 28899 | 3653 | 233.5* | 144.8 | 58.9 |

**2019 வருடத்திற்காக பெறப்பட்ட ரூ.270 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் ரூபா.36.5 மில்லியன் நிதியானது 2018 இல் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான பட்டியல்களினைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது..*



நிருமாணிக்கப்பட்ட பயிற்செய்கை கிணறுகள்



*சனசமூக மண்டப நிருமாண பூர்த்தி - மஹாநெலுபேவ*

***வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உபகரணங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்***

| # | மாவட்டம் | வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளினூடாக குறித்த மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் | | | | | | | | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மலர்கள் மற்றும் மரக்கறி | மீன்பிடி உபகரணங்கள் | தச்சுவேலை கருவிகள் | புல் வெட்டிகள் | விசிறிகள் | தையல் இயந்திரங்கள் | அழகு சாதன உபகரணங்கள் | ஏனைய சுயதொழில் உபகரணங்கள் | பாரிய வாகன பயிற்சி | ஏனையவை |
| 01 | அநுராதபுரம் | 10 | - | - | - | - | - | 15 | - | - | - |
| 02 | மட்டக்களப்பு | 317 | 298 | 45 | - | 169 | 450 | 35 | 692 | - | 500 |
| 03 | மொனராகலை | 25 | - | 50 | 75 | 100 | 50 | - | - | 16 | - |
| 04 | பொலநறுவை | - | - | - | 200 | 100 | - | - | 90 | - | - |
| 05 | புத்தளம் | 100 | 50 | 50 | 75 | 100 | 50 | - | 215 | - | - |
| 06 | முல்லைத்தீவு | - | 25 | 5 | 20 | - | - | - | - | - | - |
| 07 | மாத்தளை | - | - | 15 | - | - | - | - | 7 | - | - |
| **மொத்தம்** | | **452** | **373** | **165** | **370** | **469** | **550** | **50** | **1,004** | **16** | **500** |

### 2.3.2. பாரம்பரிய கைப்பணிப் பொருட்களின் கிராமங்களை அபிவிருத்தி செய்தல்

2019 இல் உள்நாட்டு நிதி மூலங்களிலிருந்து இக்கருத்திட்டத்திற்கு ரூபா.20 மில்லியன் நிதி ஏற்பாடுகள் கிடைக்கக்கூடிதாக இருந்தது. புத்தாக்க உற்பத்திகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்புக்களினை வழங்குதல், புத்தகக்ப் உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளினை வலுப்படுத்துதல், நவீன உபகரணங்களினை அறிமுகப்படுத்துதல், மரபு சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் கைப்பணித் திறன்களை விருத்தி செய்வதில் புதிய தொழில்நுட்ப பெறுமதிகளினைச் சேர்த்தல், கைப்பணிப் பொருட்களின்

தயாரிப்பில் ஈடுபடுகின்றவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளினை விரிவாக்குதல் என்பன இந்த கருத்திட்ட நடவடிக்கைகளில் உள்ளங்கியுள்ளன.

நாடு பூராகவும் தெரிவு செய்யப்பட்ட 13 மாவட்டங்களில் 53 பிரதேச செயலகப் பிரிவுகளில் பாரம்பரிய கைப்பணிப் பொருட்களினை விருத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கிணங்க, பாரம்பரிய கைப்பணிப் பொருட்கள் தயாரிக்கப்படும் கிராமங்களினை விருத்தி செய்வதற்குத் தேவையான பயிற்சி, தொழில்நுட்ப அறிவு, பொருட்கள், உபகரணங்கள் என்பவற்றினை வழங்குவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் உரிய மாவட்டச் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இக் கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்காக கவனத்தில் கொள்ளப்பட்ட கைத்தொழில்கள் பின்வருமாறு;

*பாரம்பரிய கைப்பணி அபிவிருத்தியின் கீழ் அடையாளங் காணப்பட்ட துறைகள் - 2019*

| | | | |
|---|---|---|---|
| *தரைவிரிப்புக்களின் தயாரிப்பினை விருத்தி செய்தல்* | *ஆபரண தயாரிப்பு* | *நார் சார்ந்த உற்பத்திப பொருட்களின் விருத்தி* | *ஓவியம், சிற்ப கலைளின் விருத்தி* |
| *தும்பு சார்ந்த உற்பத்தித்துறையின்* | *பித்தளை கைத்தொழில் விருத்தி* | *பிரம்பு தொடர்பான உற்பத்திகளின் விருத்தி* | *மூங்கில் தொடர்பான ஆக்கங்கள்* |
| *தேங்காய் சிரட்டைகளினைக் கொண்டு தயாரிக்கப்படும் உற்பத்திகள்* | *பற்றிக் கைத்தொழில்* | *தூரிகைகளின் உற்பத்தி* | *கல் பதிக்கும் தொழில் விருத்தி* |
| *தங்க வேலையாளர்களின் விருத்தி* | *விசேட கைப்பணி வேலைகள் விருத்தி* | *கயிறு உற்பத்திகளின் விருத்தி* | *பனம்பொருள் தொடர்பான உற்பத்திகளின் விருத்தி* |
| *முத்திரை மெழுகு வேலையாளர்களின் விருத்தி* | *வர்ணப் பாய்கள் (கலால) கைத்தொழில் விருத்தி* | *முகமூடி கைத்தொழில் விருத்தி* | |

***பாரம்பரிய கைப்பணிப் பொருட்கள் கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்தல் - 2019.12.31 ஆம் திகதிய முன்னேற்றம்***

| # | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | மொத்த நிதி ஒதுக்கீடு (ரூ.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காலி | ஹபருதாவ, யக்கலமுல்ல, கடவனசதுர, காலி, ஹோனபினுவல, இமதுவ, ஹிக்கடுவ, பொபேபொத்தல, பென்தோட்டை, அம்பலாங்கொடை, பத்தேகம | 12 | 232 | 3,951,370.00 | 3,786,970.38 | 100% |
| 2 | குருநாகல் | இப்பாகமுவ, கொடவெஹற, கல்கமுவ, குருநாகல், பொல்பிதிகம, நிக்கவரட்டியா, வாரியபொல, மாஸ்பொத, கனேவத்தை, பன்னல. | 12 | 124 | 2,216,705.00 | 1,718,020.00 | 98% |
| 3 | புத்தளம் | சிலாபம், புத்தளம் | 2 | 25 | 147,980.00 | 144,025.00 | 90% |
| 4 | மொனராகலை | கதிர்காமம், மொனராகலை. | 2 | 18 | 392,940.00 | 378,764.00 | 100% |
| 5 | ஹம்பாந்தோட்டை | அம்பலாந்தோட்டை, சூரியவெவ, பெலயத்தை, | 15 | 192 | 3,092,105.00 | 2,998,199.00 | 96% |

| # | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | மொத்த நிதி ஒதுக்கீடு (ரூ.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | கடுவான, தங்காலை | | | | | |
| 6 | கண்டி | யடிநுவர, உடுதும்பர | 11 | 40 | 857,180.00 | 811,128.96 | 95% |
| 7 | மாத்தறை | திஹகொட, பிடவத்தற, கிருந்தபுஷுல்வெல்ல, திக்வல்ல ஹக்மன, வெலிபிட்டிய, முலதியன, கம்புருப்பிட்டிய | 13 | 247 | 4,195,955.00 | 4,181,498.00 | 100% |
| 8 | அநுராதபுரம் | பளுகஸ்வவ | 1 | 20 | 408,245.00 | 400,000.00 | 98% |
| 9 | கேகாலை | கேகாலை, தெஹிம்பவிட்ட, ருவான்வெல்ல | 7 | 37 | 1,469,385.00 | 739,253.28 | 96% |
| 10 | பொலநறுவை | திம்பலாகலை | 4 | 8 | 82,155.00 | 80,600.00 | |
| 11 | களுத்துறை | அகலவத்தை, பாணந்துறை, பண்டாரகம் | 6 | 48 | 678,400.00 | 508,328.00 | 96% |
| 12 | மட்டக்களப்பு | ஏறாவூர் நகர், வவுணதீவு, மண்முனைப்பற்று | 05 | 62 | 1,265,335.00 | 1,038,093.50 | 97% |
| 13 | யாழ்ப்பாணம் | காரைநகர், சண்டிலிப்பாய், கரவெட்டி | 03 | 72 | 683,540.00 | 478,390.00 | 73% |
| | மொத்தம் | | 93 | 1125 | 19,441,295.00 | 17,378,420.00 | |





பனையோலை கைப்பணிப் பொருட்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் – தங்காலை பி.செ.பிரிவு

### 2.3.3. மட்பாண்டங்களினை உற்பத்தி செய்யும் கிராமங்களினை அபிவிருத்தி செய்தல்.

இந்தக் கருத்திட்டத்தினூடாக கிராமிய மட்பாண்ட கைத்தொழிலில் ஈடுபடுகின்ற குடும்பங்களை ஊக்குவித்தல், குயவர்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுதல், சந்தை நோக்கிலான உற்பத்திகளினை அறிமுகப்படுத்துவதனூடாக சந்தைப்படுத்தல் வசதிகளினை விரிவாக்குதல் மற்றும் குறைந்த வருமானத்தினை ஈட்டுகின்ற குயவர்களுக்கு உபகரணங்களை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வு காலப்பகுதியில் இக்கருத்திட்டத்திற்கு ரூபா.10 மில்லியன் தொகையுடைய நிதி எற்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதற்கிணங்க, குருநாகல், ஹம்பாந்தோட்டை,

பொலநறுவை, கேகாலை, மாத்தளை, புத்தளம், அநுராபுரம், இரத்தினபுரி, பதுளை, மட்டக்களப்பு, களுத்துறை மற்றும் கண்டி ஆகிய பிரதேச செயலகங்களிலாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளுக்கமைய மட்பாண்ட கிராமங்களினை விருத்தி செய்வதற்கான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக்கருத்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் நடவடிக்கைகள் பின்வருமாறு.

- பாரம்பரிய மட்பாண்ட கைத்தொழிலில் ஈடுபடுகின்ற குயவர்களுக்குப் பயிற்சியினை வழங்குதல்
- மட்பாண்ட கைத்தொழிலில் நவீன தொழில்நுட்ப பிரயோகங்கள் தொடர்பில் பயிற்சியினை நடாத்துதல்.
- குயவர்களுக்கு களிமண் அரைக்கும் இயந்திரங்களை வழங்குதல்
- மின்சார சக்கப்போருவினை வழங்குதல்
- எரிவாயு பாத்திரங்களின் தயாரிப்புக்குத் தேவையான இயந்திரங்கள், உபகரணங்களை வழங்குதல்
- குயவர்கள் தமது உற்பத்திப் பொருட்களினை சந்தைப்படுத்துவதற்காக விற்பனை நிலையங்களினைக் கண்டறிதல்
- மட்பாண்ட உற்பத்திப் பொருட்களினை சந்தைப்படுத்தல் மற்றும் கண்காட்சிகளினை ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக குயவர்களை ஊக்குவித்தல்

12 மாவட்டங்களின் 33 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 380 பயனாளிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் விபரம் பின்வருமாறு.

***மட் பாண்ட உற்பத்திக் கிராமங்களை அபிவிருத்தி செய்தல் - 2019.12.31 ஆம் திகதியிலுள்ளவாறான முன்னேற்றம்***

| # | மாவட்டம் | பி.செ.பிரிவு | கருத்திட்டம் அமுல்படுத்தபப்டும் கிராமம் | பயனாளிகளின் எண். | மொத்த நிதி ஒதுக்கீடு (ரூ.) | நிதிசார் முன். (ரூ) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | குருநாகல் | பன்னல | 1529 -வெரஹர | 15 | 439,885.00 | 431,000.00 | 96% |
| | | நாரம்மல | தலஹென | 7 | 403,145.00 | 395,000.00 | 96% |
| | | உடுபட்டவ | பி.செ.பிரிவில் | 10 | 510,310.00 | 500,000.00 | 94% |
| | | வீரம்பநேதர | கனுமாலே | 2 | 86,750.00 | 85,000.00 | 100% |
| | | கொபிகனே | பி.செ.பிரிவில் | 10 | 204,125.00 | 200,000.00 | 100% |
| | | அளவ்வ | மத்தேகொட | 4 | 163,300.00 | 160,000.00 | 100% |
| | | ரஸ்நாயகபுர | சுதீரகம | 5 | 372,525.00 | 365,000.00 | 95% |
| | | பிங்கிரிய | உரபொத்த | 10 | 479,690.00 | 470,000.00 | 100% |
| | | பண்டுவஸ்நுவர (மேற்கு) | மெதகம | 20 | 408,245.00 | 406,183.75 | 95% |
| 2 | ஹம்பாந்தோட்டை | வலஸ்முல்ல | பிபுலகொட | 10 | 686,750 .00 | 678,000.00 | 95% |
| | | வீரகட்டிய | புத்தியாகம(வடக்கு) யக்கஸ்முல்ல உடுகிரவில்ல | 37 | 956,430 .00 | 923,500.00 | 94% |
| | | தங்கல்ல | ரண (கிழக்கு) ரண (மேற்கு) | 5 | 122,475 .00 | 120,000.00 | 100% |

| # | மாவட்டம் | பி.செ.பிரிவு | கருத்திட்டம் அமுல்படுத்தப்படும் கிராமம் | பயனாளிகளின் எண். | மொத்த நிதி ஒதுக்கீடு (ரூ.) | நிதிசார் முன். (ரூ) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | இஹலகொட | | | | |
| | | லுணுகம்வெஹர | ரணவரணவவ | 8 | 163,300 .00 | 160,000.00 | 100% |
| 3 | பொலநறுவை | எலஹர | இல. 6 குமரெல்ல | 5 | 127,575 .00 | 90,165.00 | 92% |
| | | திம்புலாகல | இஹலவெவ | 3 | 61,235 .00 | 60,125 | 100% |
| 4 | கேகாலை | அரநாயக்க | தல்தனியா, கீரப்பன | 22 | 224,535.00 | 220,000.00 | 100% |
| | | வரகாபொல | அப்பேபுஸ்ஸ, வரகாபொல, லுந்தெனிய, வெனிவெல்கதுவ, ஹெலங்கமுவ | 5 | 178,610.00 | 178,505.00 | 100% |
| 5 | மாத்தளை | கலேவல | லெனவல | 6 | 204,125.00 | 197,660.00 | 99% |
| 6 | புத்தளம் | மாதம்பை | 544 கல்முருவ (வடக்கு) | 2 | 76,545.00 | 75,000.00 | 100% |
| | | முந்தல் | புளிச்சகுளம் | 12 | 306,185.00 | 298,000.00 | 99% |
| | | ஆனமடுவ | வட்டக்கறவெவ | 5 | 102,060.00 | 101,550.00 | 100% |
| 7 | அநுராதபுரம் | திரப்பன | 545 அம்பத்தலே மேல், பண்டித, ரம்பேவ | 20 | 408,245.00 | 400,000.00 | 98% |
| | | கெப்பெத்திக்கால்லாவ | குருலுகம | 15 | 306,185.00 | 300,000.00 | 100% |
| | | கஹட்டகஸ்திலிய | லுல்னேவா | 20 | 408,245.00 | 400,000.00 | 99% |
| | | தம்புத்தேகம | மெஹியெல்லேவ | 20 | 408,245.00 | 400,000.00 | 99% |
| | | பலகல | குடஹெட்டியாவ | 10 | 204,125.00 | 200,000.00 | 99% |
| 8 | இரத்தினபுரி | எஹெலியகொட | கெந்தலன்கமுவ<br>பஹலகம பிரிவு | 10 | 214,330.00 | 139,930.00 | 100% |
| 9 | பதுளை | வெலிமட | தம்பவின்ன, நாவல்ல | 9 | 204,125.00 | 134,726.00 | 95% |
| | | மஹியங்கனை | தெஹிகொல்ல, பெலகல | 20 | 408,250.00 | 400,000.00 | 95% |
| 10 | களுத்துறை | அகலவத்தை | ரத்மலே (கிழக்கு) | 10 | 224,535.00 | 169,525.00 | 89% |
| 11 | கண்டி | பத்தும்பர | 645 தல்கொட்டுவ | 4 | 86,750.00 | 85,750.00 | 100% |
| 12 | மட்டக்களப்பு | மன்முனை (மேற்கு) | கருந்தமுன்மாரி கன்விரங்குடாமன்முறை (மேற்கு) | 20 | 326,600.00 | 320,000.00 | 95% |
| | | போரதீவுப்பற்று | போரைதீவுப்பற்று | 20 | 408,245.00 | 396,363.75 | 85% |
| | | மன்முனைப்பற்று (தென் மேற்கு) | காத்தான்குடி | 5 | 14,290.00 | 14,217.00 | 100% |
| | மொத்தம் | | | 380 | 9,899,970.00 | 9475,200.50 | |





*பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உபகரணங்கள் விநியோகம் – தங்காலை பி.செ.பிரிவு*

### 2.3.4. கித்துல் அபிவிருத்திக் கருத்திட்டம்

இந்தக் கருத்திட்டத்தின் கீழ், கித்துல் தொழில்முயற்சியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. கித்துல் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கான விற்பனை நிலையங்களினைத் தாபிக்கும் பொருட்டு மாவட்ட மட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. கித்துல் பாணி, கித்துல் கருப்பட்டி மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திப் பொருட்களை மேம்படுத்துதல் மற்றும் சந்தையில் உயர் தரத்தில் தரமான உற்பத்திகளினை பிரபல்யப்படுத்துதல் போன்றன அவற்றுள் சிலவாகும்

கித்துல் உற்பத்திப் பொருட்களை விருத்தி செய்வதற்கு கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- ❖ கித்துல் உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு 02 விற்பனை நிலையங்களினை நிருமாணிப்பதற்கான நிதி ஏற்பாடுகளினை மேற்கொள்ளுதல்
- ❖ காடுகளில் கித்துல் பூக்களை வெட்டுதல் தொடர்பான ஆற்றல் குறித்து கித்துல் கைத்தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
- ❖ புதிய வடிகட்டல் சட்டம் தொடர்பில் கித்துல் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்
- ❖ கித்துல் கைத்தொழிலினை விருத்தி செய்வதற்கு அதனுடன் தொடர்புடைய தொழில்முயற்சியாளர்களுக்கு நிதிசார் உதவுகையினை வழங்குதல்
- ❖ கித்துல் கைத்தொழிலாளர்களுக்கான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குலும்
- ❖ கித்துல் தொழிலாளர்களைப் பதிவு செய்தலும் அவர்களின் அடையாளத்தினை உறுதிப்படுத்துதலும்.

2019 ஆம் ஆண்டில் கித்துல் அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக உள்ளூர் நிதியங்களிலிருந்து கிடைத்த ரூபா.5 மில்லியன் தொகையானது செலவிடப்பட்டுள்ளது. 10 மாவட்டங்களின் 25 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 1,042 பயனாளிகளுக்காக முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் விபரங்கள் பின்வருமாறு.

## கித்துல் கிராம அபிவிருத்திக் கருத்திட்டம் - 2019

| # | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கருத்திட்டம் அமுல்படுத்தப்படும் கருத்திட்டம் | பயனாளிக ளின் எண். | மொத்த நிதி ஒதுக்கீடு (ரூ) | நிதிசார் முன். (ரூ) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கேகாலை | வரக்காபொல | மல்மடுவ | 16 | 61,235.00 | 61,050.00 | 100% |
| | | தெஹியோவிட்ட | பி.செ.பிரிவில் | 50 | 796,080.00 | 677,144.00 | 85% |
| | | அரநாயக்க | பி.செ.பிரிவில் | 20 | 117,370.00 | 113,400.00 | 100% |
| | | மாவனல்ல | ஹம்மேத்தகம | 30 | 224,535.00 | 222,929.05 | 100% |
| | | புளத்கொஹுபிட்டிய | பாலம்பிட்டிய, தேத்தாகல, உடுவ, அலவதுர, புளத்கொஹுபிட்டிய | 8 | 56,135.00 | 54,990.00 | 100% |
| 2 | நுவரெலியா | ஹகுரத்கென | பி.செ.பிரிவில் | 83 | 61,235.00 | 61,235.00 | 100% |
| 3 | காலி | யக்கலமுல்ல | பி.செ.பிரிவில் | 30 | 199,020.00 | 193,750.00 | 95% |
| | | தெழுவ | பி.செ.பிரிவில் | 10 | 132,680.00 | 124,038.00 | 91% |
| | | கவலம | பி.செ.பிரிவில் | 300 | 61,235.00 | 60,926.25 | 100% |
| | | எல்பிட்டிய | பி.செ.பிரிவில் | 20 | 224,535.00 | 219,725.00 | 99% |
| | | நியாகம | பி.செ.பிரிவில் | 60 | 102,060.00 | 89,751.95 | 80% |
| 4 | இரத்தினபுரி | அயகம | பி.செ.பிரிவில் | 40 | 193,915.00 | 190,000.00 | 98% |
| | | எஹலியகொட | பி.செ.பிரிவில் | 25 | 45,925.00 | 44,469.00 | 100% |
| | | கொடகவெல | தம்பலகமுவ (மேற்கு) | 20 | 204,125.00 | 199,600.00 | 97% |
| | | இரத்தினபுரி | மாபலான | 20 | 163,300.00 | 160,000.00 | 98% |
| | | பலாங்கொடை | பி.செ.பிரிவில் | 50 | 224,535.00 | 220,000.00 | 97% |
| 5 | ஹம்பாந்தோட்டை | கட்டுவன | பி.செ.பிரிவில் | 70 | 163,300.00 | 163,300.00 | 100% |
| 6 | பதுளை | லுணுகல | பி.செ.பிரிவில் | 30 | 602,165.00 | 582,496.00 | 78% |
| | | வெலிமட | பி.செ.பிரிவில் | 10 | 147,990.00 | 59,692.00 | 65% |
| 7 | மாத்தறை | பிடபத்தற | பி.செ.பிரிவில் | 50 | 306,185.00 | 300,000.00 | 89% |
| 8 | புத்தளம் | சிலாபம் | கரவெட்டிஹர | 20 | 219,435.00 | 17,500.00 | 95% |
| 9 | களுத்துறை | பாலிந்தநுவர | பி.செ.பிரிவில் | 40 | 244,950.00 | 240,000.00 | 97% |
| | | அகலவத்தை | கரஸ்கஹபத்த | 10 | 102,060.00 | 73,000.00 | 75% |
| | | மதுகம | குருதல | 15 | 90,835.00 | 90,030.00 | 100% |
| 10 | கண்டி | அக்குரண | துனுவில(வடக்கு), துனுவில(தெற்கு) பள்ளேதிகல உடதிகல்ல | 15 | 173,505.00 | 170,000.00 | 96% |
| | மொத்தம் | | | 1042 | 4,918,345.00 | 4,389,026.25 | |

## 2.4. கிராமிய பொருளாதார பிரிவினூடாக 2020 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படவுள்ள நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்திட்டங்களும்.

கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்காக பின்வரும் ஒழுங்குமுறையில் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

கிதுல் அபிவிருத்திக் கருத்திட்டம் - ரூ. 5 மில்.
மட்பாண்ட கிராம அபிவிருத்திக் கருத்திட்டம் - ரூ.10 மில்.
பாரம்பரிய கைப்பணிப் பொருட்கள் கைத்தொழில் கிராம அபிவிருத்திக் கருத்திட்டம் - ரு. 20 மில்.

இத்தகைய கைத்தொழில்களில் வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற _வித்தைக்காரர்கள்,. கலைஞர்களின் விருத்திக்கான கருத்திட்ட முன்மொழிவுகளின்படி உரிய அபிவருத்தி நடவடிக்கைகளினை நிறைவேற்றுவதற்காக 2020 ஆம் ஆண்டுக்காக மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ஏற்பாடுகளினை விதித்துரைத்து அனுப்பி வைத்ததன் பின்னர் அபிவிருத்தி நடவடிக்கைகளினை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.5. 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

### 2.5.1. விசேட பொருளாதார நிலையங்களினை நவீனமயப்படுத்தும் கருத்திட்டம்

விசேட பொருளாதார நிலையங்களினை நவீனமயப்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில் உள்நாட்டு திரட்டு நிதியத்திலிருந்து ரூபா.10 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. 2019.12.31 ஆம் திகதி வரையிலான முன்னேற்றம் பின்வருமாறு.

| நவீனமயப்படுத்தும் நடவடிக்கை | ஒதுக்கீடு (ரூ.மில.) | பௌதீக முன்னேற்றம் | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மில்.) |
|---|---|---|---|
| வவுனியா விசேட பொருளாதார நிலையம் | | | |
| வவுனியா விசேட பொருளாதார நிலையத்திற்கான அலுவலக உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளுதல். | 0.65 | கொள்வனவு நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன. | 0.65 |
| தம்புத்தேகம விசேட பொருளாதார நிலையம் | | | |
| தம்புத்தேகம விசேட பொருளாதார நிலையத்தின் உள்ளக கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துதல் ( ගලි ප්‍රීමන්ට සහ ආරක්ෂක තාප්පය ඉදිකිරීම | 5.5 | நிருமாண நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன. | 5.5 |
| மட்டக்களப்பு விசேட பொருளாதார நிலையம் | | | |
| மட்டக்களப்பு விசேட பொருளாதார நிலையத்திற்கான அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல். | 0.503 | கொள்வனவு நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன. | 0.503 |
| மட்டக்களப்பு விசேட பொருளாதார நிலையத்திற்கு மின் இணைப்பினைப் பெற்றுக் கொள்ளுதல். | 1.14 | வேலைகள் நிறைவு பெற்றுள்ளன. | 1.14 |
| எம்பிலிப்பிட்டிய விசேட பொருளாதார நிலையம் | | | |
| குத்தகைக்கு வழங்கப்படவுள்ள கடைகளினை புதுப்பித்தல் | 0.784 | வேலைகள் நிறைவு பெற்றுள்ளன. | 0.784 |

# 3. 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முற்று முழுதான நிதிச் செயலாற்றுகை

## 3.1. நிதிசார் செயலாற்றுகை கூற்று

ஏசிஏ-எப்

நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

2019 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலத்திற்கான செயலாற்றுகைக் கூற்று

ரூபா.

| வ.செ.திட்டம் 2019 | | குறிப்பு | உண்மையான 2019 | உண்மையான 2018 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசிஏ1 |
| - | உள்ளூர் பொருட்கள், சேவைகளுக்கான வரிகள் | 2 | - | - | ஏசிஏ1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசிஏ1 |
| - | வரியல்லா வருமானம் மற்றும் பிற | 4 | - | | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமல்லாத பெறுகைகள்** | | **875,020,413** | - | |
| - | திறைசேரி முற்பணம் | | 767,362,472 | | ஏசிஏ3 |
| - | வைப்புக்கள் | | 2,400,472 | | ஏசிஏ4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 16,936,454 | | ஏசிஏ5 |
| - | வேறு பெறுகைகள் | | 88,321,015 | | குறிப்பு 1 |
| - | **மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)** | | **875,020,413** | | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ=(அ) +(ஆ)** | | **875,020,413** | - | |
| | **கழி: செலவினம்** | | | | |
